## மே – 17 - புதன்

### புனித பஸ்கால் பபிலோன்

**“நான் சொன்ன வார்த்தைகளால் நீங்கள் ஏற்கெனவே தூய்மையாய் இருக்கிறீர்கள்.” யோவா. 15:3**

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 15 : 1 – 6

அக்காலத்தில் யூதேயாவிலிருந்து வந்த சிலர் நீங்கள் மோசேயின் முறைமைப்படி விருத்தசேதனம் செய்து கொள்ளா விட்டால் மீட்படைய முடியாது” என்று சகோதரர் சகோதரிக ளுக்குக் கற்பித்து வந்தனர். அவர்களுக்கும் பவுல்இ பர்னபா ஆகியோருக்குமிடையே பெருங்கருத்து வேறுபாடும் விவாதமும் உண்டாயின. எனவே பவுலும் பர்னபாவும் அவர்களுள் சிலரும் எருசலேமுக்குச் சென்றுஇ திருத்தூதர்களிடமும் மூப்பர்களிடமும் இந்த சிக்கலைக் குறித்துக் கலந்து பேசுமாறு நியமிக்கப்பட்டனர். அங்கிருந்து திருச்சபையார் அவர்களை வழியனுப்பி வைத்தனர். அவர்கள் பெனிசியாஇ சமாரியா வழியாகச் சென்று பிற இனத்தவர் மனந்திரும்பிய செய்தியை எடுத்துரைத்தார்கள். இது சகோதரர் சகோதரிகள் அனைவரிடமும் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அவர்கள் எருசலேம் வந்தபோது திருச்சபையாரும்இ திருத்தூதர் களும்இ மூப்பர்களும் அவர்களை வரவேற்றார்கள். அப்போது கடவுள் தங்கள் வழியாகச் செய்த அனைத்தையும் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் பரிசேயக்கட்சியினருள் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்ட சிலர் எழுந்துஇ ”அவர்கள் விருத்தசேதனம் செய்துகொள்ளவேண்டும் மோசேயினது சட்டத்தைக் கடைப்பிடிக்க அவர்களுக்குக் கட்டளையிடவேண்டும்” என்று கூறினர். இதனை ஆய்ந்துபார்க்கத் திருத்தூதரும் மூப்பரும் ஒன்று கூடினர்.

**பதில்பாடல் :** அகமகிழ்ந்து ஆண்டவரது இல்லத்திற்குப் போவோம்

### நற்செய்தி : யோவான் 15 : 1 – 8

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:, ”உண்மையான திராட்சைச் செடி நானே. என் தந்தையே அதை நட்டு வளர்ப்பவர். என்னிடமுள்ள கனிகொடாத கொடிகள் அனைத்தையும் அவர் தறித்துவிடுவார். கனிதரும் அனைத்துக் கொடிகளையும் மிகுந்த கனி தருமாறு கழித்து விடுவார். நான் சொன்ன வார்த்தைகளால் நீங்கள் ஏற்கெனவே தூய்மையாய் இருக்கிறீர்கள். நான் உங்களோடு இணைந்து இருப்பதுபோல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள். கொடி திராட்சைச் செடியோடு இணைந்து இருந்தாலன்றித் தானாக கனிதர இயலாது. அதுபோல நீங்களும் என்னோடு இணைந்திருந்தாலன்றிக் கனிதர இயலாது. நானே திராட்சைச் செடி நீங்கள் அதன் கொடிகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது. என்னோடு இணைந்து இராதவர் கொடியைப் போலத் தறித்து எறியப்பட்டு உலர்ந்து போவார். அக்கொடிகள் கூட்டிச் சேர்க்கப்பட்டு நெருப்பிலிட்டு எரிக்கப்படும். நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும். நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது” என்றார்.

**தியானம்:** இறைவார்த்தையைக் கேட்பதும், தியானிப்பதும், அதை நம் வாழ்வாக்கிக் கொள்வதுமே மனித வாழ்க்கையின் முழுமை என்று சொன்னால் அது மிகையாகாது. கடவுளின் வார்த்தையை நாம் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளும் போது நாம் தூய்மை அடைகின்றோம். உள்ளத் தூய்மையோடு நாம் அந்த வார்த்தைகளையே நமது வாழ்வாக்கிக் கொள்ளும்போது அது ஒரு நிறைவான வாழ்வு மட்டுமல்ல, நம் தந்தையாகிய கடவுளை மாட்சிப்படுத்துவதாக அமைகின்றது என்று இறைமகன் இயேசு நமக்கு எடுத்து இயம்புகின்றார். கடவுள் நமக்களித்த உடலும், உள்ளமும் தூய்மையாகப் பேணப்பட வேண்டியது அவசியமானதே. பழைய ஏற்பாட்டு மக்களின் மனநிலையையும் வாழ்க்கை முறையையும் பொறுத்து அவர்களுக்கு மோயீசன் பல சட்ட திட்டங்களைக் கொடுத்தார். ஆனால், எந்தச் சட்ட திட்டமும் ஒரு மனிதனுக்கு நிறைவான தூய்மையையும், நிறைவான வாழ்வையும் தந்துவிடாது. இறைமகன் இயேசு நமக்களித்த நற்செய்தி ஒன்றே நிறைவாழ்வும், நிலைவாழ்வும் தர வல்லது. திருச்சபையின் ஆரம்ப காலகட்டத்தில், தங்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளை தீர்த்துக்கொள்ள எத்துணை பக்குவமான முறையில் திருத்தூதர்களுடனும், மூப்பர்களுடனும், திருச்சபையாரும் கலந்துரையாடித் தீர்த்துக் கொள்ளவும் இறைவார்த்தைகள் அவர்களுக்கு வழிகாட்டி நின்றதுபோல இன்றும் நம்மிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளையும், பிளவுகளையும் களைய நாம் இறைவார்த்தையின் விழுமியங்களையே நாட வேண்டும். எக்காலத்துக்கும், எந் நிலையிலும், எவ்வித பிரச்சனைகளுக்கும் நிரந்தரமான ஒரே தீர்வு தரவல்லது இறைவார்த்தை ஒன்றே! என்பதும் இன்று நாம் கற்றுக்கொள்ளும் பாடமாகும்.